


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில், "ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு 2023" அறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா.ரெட்டி, முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் டி.வெங்கடேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் வெப்பநிலை அதிகரிக்கும்!

சென்னை, ஆக.9-

தமிழகத்தில் வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, 14.08.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி முதல் 39 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

### நீர்வளத்துறை சார்பில் பொறியாளர்களுக்கு

# 9 டி.ஜி.பி.எஸ். 214 கையடக்க ஜி.பி.எஸ். கருவிகள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஆக.9–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள 9 கோட்டங்களுக்கு 9 DGPS (Digital Global Positioning System) கருவிகளையும், 214 கையடக்க GPS கருவிகளையும் நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 5 பொறியாளர்களுக்கு அக்கருவிகளை வழங்கினார்.

நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தி விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு துறைகளின் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசன கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புசுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

நீர்வளத்துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், நீர்வளத்துறையின் திட்ட உருவாக்க பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள 9 கோட்டங்களுக்கு 9 DGPS கருவிகளையும் மற்றும் அப்பிரிவில் உள்ள அனைத்து உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு 214 மடிக்கணினிகள், 214 கையடக்க GPS கருவிகள் மற்றும் 250 பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்த உபகரணங்களை கொள்முதல் செய்திட மொத்தம் 9.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அக்கருவிகளை நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் வகையில், 9 DGPS கருவிகள் மற்றும் 214 கையடக்க GPS கருவிகள் ஆகியவை எல்காட் மூலம் 5.11 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த DGPS மற்றும் கையடக்க GPS ஆகிய நவீன கருவிகள் செயற்கைக்கோள் தொடர்புடன் இயக்கப்படுகிறது.

மேலும், இந்த DGPS கருவிகள் செயற்கைக்கோள்களிலிருந்து சமிக்ஞைகளைப் பெற்று அதன்மூலம் இருப்பிடத்தை துல்லியமாக அளப்பதால், நீர்பாசன திட்டங்களான தடுப்பணைகள், ஏரிகள், நீர்தேக்கங்கள், கால்வாய்கள் போன்ற அமைப்புகளை அமைத்திட துல்லியமான நிலஅளவைகள் போன்ற ஆய்வு பணிகளை புவியியல் தகவல் அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளவும், வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளை நீர்வளத்துறையின் திட்ட உருவாக்க பிரிவு பொறியாளர்கள் துரிதமாக மேற்கொள்ளவும், அதன்மூலம் திட்டங்களின் பலன்கள் மக்களிடம் உரிய காலத்தில் சென்றடையவும் இக்கருவிகள் பெரிதும் உதவுகின்றன. அத்துடன் நீர்வள ஆதாரங்களை தொடர்ந்து கண்காணிப்பதில் இக்கருவிகள் குறிப்பிட்ட பங்கு வகிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறை யின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அ.முத்தையா, நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் தலைமைப் பொறியாளர் க.பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நரிக்குறவர்கள் முன்னேற்றத்தில் தனி கவனம்: உயர்நீதிமன்றத்தில் அரசு விளக்கம்!

சென்னை, ஆக.9-

நரிக்குறவர்கள் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், செம்பியத்தைச் சேர்ந்த ஜி.தேவராஜன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொது நல மனுவில், "திருவள்ளூர், பெரியகுப்பத்தில் ரெயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு முன்பு அந்த இடத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக குடில் அமைத்து வசித்து வந்த நரிக்குறவர்களுக்கு வீட்டுமனை வழங்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா, நீதிபதி பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு தரப்பில் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

**இலவச மனை**

நரிக்குறவர்களின் பொருளாதார சூழ்நிலையை கருதி, அவர்களை முன்னேற்ற ஒன்றிய, மாநில அரசுகள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவர்களை எஸ்.டி.பிரிவில் சேர்க்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், புன்னபாக்கம் கிராமத்தில், 52 நரிக்குறவர் குடும்பத்துக்கு இலவச மனையும், அதற்கு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. அதில், 7 குடும்பத்தினர் மட்டும் வீடுகளை கட்டி குடியேறியுள்ளனர். இந்த இடம், ஏற்கனவே அவர்கள் வசித்த இடத்தில் இருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதனால், இந்த நிலம் வேண்டாம், ஏற்கனவே இருந்த இடத்தில் இருந்து மிக அருகில் உள்ள வேறு ஒரு இடம் தான் வேண்டும் என்று கேட்கின்றனர்.

**சிறப்பு கவனம்**

இவர்கள் புன்ன பாக்கம் கிராமத்தில் குடியேறினால், அவர்களுக்கு இலவச மின்சாரம், குடிநீர் வசதிகள் என்று அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இந்த நரிக்குறவர்களுக்கு கல்வி உள்ளிட்டவைகளை வழங்க மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது. பின்னர், அரசு பிளீடர் பா.முத்து குமார் ஆஜராகி, "நரிக்குறவர் சமுதாயம் முன்னேற்றத்துக்காக தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நரிக்குறவர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று அவர்கள் நிலை குறித்து விசாரித்து, அவர்களுக்கு நலத்திட்டங்களை கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார்" என்று கூறினார்.

**கூடுதல் அறிக்கை**

இதையடுத்து, புன்னபாக்கம் கிராமத்தில் குடியேறாமல் உள்ள நரிக்குறவர்கள் குறித்தும், அவர்களுக்கு செய்துக் கொடுக்கப்போகும் திட்டங்கள் குறித்தும் கூடுதல் அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

### தமிழ்நாடு சுற்றுலா - ஓட்டல் அமுதகம் உணவகங்களில்

# சமையலர்களுக்கு தலைசிறந்த உணவுக் கலை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி முகாம்!

### அமைச்சர் கா.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக.9-

சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் இன்ஸ்டிடியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் கல்லூரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு அமுதகம் உணவகங்களில் பணிபுரியும் சமையலர்களுக்கு தலை சிறந்த உணவுக் கலை வல்லுநர்கள் கொண்டு பயிற்சியளிக்கும் முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (7.8.2023) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் தமிழ்நாடு இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தலங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டார் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தை களுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. மேலும் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சமூக வலைதளங்கள் மூலமாக தமிழ்நாட்டின் சுற்றுலாத்தளங்களின் சிறப்புகள் குறித்த காணொலி காட்சிகள் உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாப்பயணிகளின் கவனத்தை பெற்று வருகின்றன. இதன் காரணமாக வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தந்து கொண்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் ஹோட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் செயல்பட்டு வரும் உணவகங்களை மக்கள் எளிதில் அடையாளம் காணும் வண்ணம் தமிழ்நாடு முழுவதும் ஒரே பெயராக அமுதகம் உணவகம் என்று பெயர் சூட்டியுள்ளார். இதன் காரணமாக பொதுமக்கள் மத்தியில் அமுதகம் என்ற பெயர் புகழ்பெற்று வருகின்றது.

சுற்றுலா பயணிகளுக்கு சுவையான மற்றும் தற்போதைய புதுமையான உணவு வகைகள் வழங்கும் வகையில், அமுதகம் உணவகங்களில் பணி புரியும் சமையலர்களுக்கு சிறந்த சமையல் கலை வல்லுனர்களை கொண்டு இன்று முதல் 12.8.2023 வரை பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.25/2023–2024/வ1/நாள்–08.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **திருநெல்வேலி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **(வ.எண்.1 இரு உறை முறையில் மற்றும் வ.எண்.2 ஒரு உறை முறையில்)** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023–14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4380/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருநெல்வேலி**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 02/2023-24 / முவஅ / நாள்: 02.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் திருச்சி (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 திட்டப்பணி - "கீழப் பெரம்பலூர் - வேள்விமங்கலம் சாலை கி.மீ 0/10 ல் சின்னாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) **30.08.2023, 15.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**செ.ம.தொ.இ./4343/ஒப்பந்தப்புள்ளி/2023**

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".


# 'கத்தர்' எனும் மாபெரும் வெகுமக்கள் பாடகன் !



'கதர்' ( Gadar ) என்பது, பராக்கிரமம் செறிந்த பஞ்சாபில், இந்திய விடுதலை வேள்வியின்போது விளைந்த புரட்சிகரமான மக்கள் இயக்கம். அந்த இணையிலா இயக்கத்தைச் சேர்ந்த மிகப்பல புரட்சி வீரர்கள் தமது இன்னுயிரை, விடுதலை நெருப்பு மேலும் மேலும் எழுந்து கொழுந்துவிட்டு எரிந்திட வேண்டும் எனும் தணியா வேட்கையில், நெய்யாக்கி வார்த்து மடிந்து போயினர் என்பது பஞ்சாபின் வாடாத வரலாறு.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர்த் திங்கள் பிறக்கையில், பஞ்சாப் - ஜலந்தரில், முற்போக்கு எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், செயலூக்கம் செறிந்த சிறந்த மனிதர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உயிர் துறந்த அந்த உத்தம மாமணிகளுக்கு நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.

அத்தகைய 'கதர்' என்ற பெயரின் நினைவாகத்தான், ஆந்திர மாநிலத்தின் மேடக் மாவட்டம் – தூப்ரன் என்ற ஊரில் பிறந்த, "கும்மடி விட்டல்ராவ்' எனப் பெற்றோரால் பெயரிடப்பட்டவர் தன்னை, "கத்தர்" ( Gaddar ) என்றழைத்து, உணர்ச்சிப் பெருக்கில் உவகையும், பெருமிதமும் கொண்டார். கதர் என்ற சொல்லின் பொருளே 'புரட்சி' என்பதாகும்.1949 – ஆம் ஆண்டில் பிறந்த கத்தர், தனது எழுபத்து நான்காவது வயதில், சென்ற ஞாயிறன்று ( 6.8.2023 ) இயற்கை எய்தியிருக்கிறார்.

கத்தர், பின்னாளில் ஹைதராபாத்துக்குக் குடிபெயர்ந்த மராத்திய தலித் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெற்றோர் சேஷய்யா – லட்சுமம்மா ஆவர்.தந்தையார் சேஷய்யா, அம்பேத்கரியராகவே இருந்தவர். **கத்தர், மாவோயிஸ்ட்டாக – தனித்தெலுங்கானா இயக்கத்தின் ஆதரவாளராக – மண்டல் செயல்பாட்டாளராக – சமூக நீதிச் சமரராக – அரசியல் வாதியாக – தலித் இயக்கவாதியாக – அம்பேத்கரியராக – பவுத்தராக – பன்முகப் பரிமாணங்களைக் கொண்டிருந்தவர். பல்வேறு போராட்டங்களின் முன்னணி ஒளி முகமாகத் திகழ்ந்தவர்.**

கத்தர், 1970களிலேயே உயிரோட்டம் பாய்ந்து ததும்பும் உன்னதப் பாடகராக, பாடல் இயற்றும் கற்பனை வளம் ஆழ வேர் கொண்டவராக, பரிணமித்தவர்.

> **"தாயே லட்சுமம்மா, சோகம் தோய்ந்த முகத்துடனும், பசி படர்ந்த உடலுடனும், ஏன் நீங்கள் மல்லிகை மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறீர்கள் ?"**

என்று அப்போது இயற்றிய பாடல்,நாளெல்லாம் நெல் வயலில் நகம் தேய உழைத்தும்,உழைத்ததற்கேற்ற கூலி கிடைக்காமல், பல நாட்கள் பட்டினி, பரிதவிப்பில் உழன்று உருக்குலைந்த தாயின் தாங்கொணாத் துயரத்தைக் கண்ணீரால் வரைந்த ஓவியமாகக் காட்டியதால், படித்தோர் அனைவரும் தாயின் துன்பத்தை, தமக்கு நேர்ந்த துன்பமாக உணர்ந்து சுருங்கினர்.

உஸ்மானியப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தும், தீவிர மாணவர் இயக்கத்தில் பங்கெடுத்து, ஆர்வம் கொண்டதால் கத்தர், படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. தொடர்ந்து புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்க நடவடிக்கைகளில் முழு நேரமும் நாட்டம் கொண்டவரானார். **அவர் இயற்றி இசைத்த பாடல்கள், அவரை இயக்கத்தின் எழுச்சி முகமாகவும், வெகுமக்கள் நேசித்த முழுமுதல் தோழராகவும் ஆக்கின.வேளாண் பெருமக்களின் ஓய்வறியா உழைப்பையும், அந்த உழைப்புச் சுரண்டலையும் குறித்து கத்தரின் புதுமையான பாடல்கள், இந்தியக் கலாச்சாரக் களத்தைச் சூறாவளியாகச் சுருட்டிப் போட்டது.**

1997ல் அவர் தனது வெங்கடாபுரம் வீட்டில் இருந்தபோது, முகந் தெரியாத அய்ந்து எதிரிகளால் சுடப்பட்டார். அறுவை சிகிச்சையின் மூலம் நான்கு துப்பாக்கிக் குண்டுகள் அகற்றப் பட்டும், ஒன்று மட்டும் அவருடைய முதுகுத் தண்டில் சிக்கிக் கொண்டுவிட்டதால், நேரும் சிக்கல்களைக் கருதி அகற்றப்படவில்லை. அதை கத்தர், அரசாங்க அடக்கு முறையின் அடையாளம் என்றார்.

மண்டலுக்கு – பிற்படுத்தப் பட்டோர்க்கான இட ஒதுக்கீட்டிற்கு – எதிர்ப்பு முளைத்த வேளையில், அந்த எதிர்ப்பு இயக்கத்தை, 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ் ' ஆங்கில ஏட்டின் ஆசிரியராக இருந்த அருண் ஷோரி ஆதரித்த நிலையில் அதைக் கண்டித்து,

> **"ஓ அருண் ஷோரி, பசியின் வலியை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள் ! ஆனால் நாங்கள் உங்கள் மலத்தை அள்ளி அகற்றி, பிழைப்பை ஓட்டுகிறோம் !"**

என்று கத்தர் பாட்டெழுதி, தெருமுனைகள் தோறும் பாடிப் பாடி, மண்டல் கமிஷன் செயலாக்கத்திற்கு ஊக்கம் தந்தார்.

தனித் தெலுங்கானா இயக்கத்திற்குப் பேராதரவு கொடுத்தவர் கத்தர்.

> **"காலம், உதய சூரியன் மீது நடந்து செல்கிறது;**
> **தெலுங்கானா இயக்கமும், சூரியன் மேல் நேரம் குறித்துக் கொண்டு நடக்கிறது"**

என்று பாட்டெழுதி, அவ்வியக்கத்தை வெகுமக்களிடம் வேகமாகக் கொண்டு சென்றார். இன்றும் அந்தப் பாடல்தான், தனித் தெலிங்கானா இயக்கத்தின் அடையாளமாகக் கொள்ளப் படுகிறது.

**வாழ்ந்த நாட்கள் முழுவதும், ஏழை எளிய பாட்டாளி மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் இலட்சியங்களின் வயப்பட்டு, அவர்களுக்காகப் பாடல்களை இயற்றி, ஓயாமல் ஆடிப் பாடிவந்த கத்தர் என்ற கவிதைப் புறா, ஆகஸ்ட் 6 அன்று, எங்கோ பறந்தே போய்விட்டது; சென்ற திசை பார்த்து, நிறைவேறாத கவியின் கனவுகளை எண்ணி, அஞ்சலி செலுத்துவோம் !**

●●●

**: கி.இராஜமாணிக்கம் :**